08.01.2025

அசல் வழக்கு எண்: 117/2022

வா.சா.1 சாட்சி வேல்ராஜா இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் தாவா சொத்தில் எந்த தேதியில் இருந்து குடியிருந்து வருகிறேன் என்றால் 10.03.2018ம் தேதியில் இருந்து குடியிருந்து வருகிறேன். நான் 10.03.2018ம் தேதியிலிருந்து குடியிருந்து வருகிறேன் என்று எனது பிராதிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி 10.03.2018ம் தேதியிலிருந்து நான்தான் தாவா சொத்தில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். கடந்த 23.05.2018ம் தேதி நானும் 1ம் பிரதிவாதியும் வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்திகொண்டோம் என்றால் சரிதான். மேற்படி வாடகை ஒப்பந்த பத்திரம் பதிவு செய்யப்படாத ஆவணம் என்றால் சரிதான். மேற்படி 23.05.2018ம் தேதி வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்திகொண்ட விபரத்தை எனது பிராதிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லியுள்ளேன். சாட்சிகள் முன்நிலையில் மேற்படி வாடகை ஒப்பந்தம் தயார் செய்யப்பட்டது என்றும் குறிப்பிட்டு பிராதிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் ஞாபகம் இல்லை.

மேற்படி வாடகை ஒப்பந்தத்தை நான்தான் தயார் செய்து வந்தேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிதான் தயார் செய்து வீட்டில் வைத்திருந்தார். வாடகை ஒப்பந்தத்தை 1ம் பிரதிவாதிதான் தயார் செய்தார் என்று எனது பிராதிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் ஞாபகம் இல்லை. ஒரு வருடத்திற்கு மட்டும்தான் மேற்படி ஒப்பந்த பத்திரம் போடப்பட்டது என்றால் சரிதான். ஒவ்வொரு ஆங்க மாதமும் 10ம் தேதிக்குள் வாடகை செலுத்தவேண்டும் என்று ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து 1ம் பிரதிவாதிக்கு தேவைப்படும் போது நான் ஒப்படைத்துவிடவேண்டும் என்று மேற்படி

ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தொடர்ந்து 3 மாதங்கள் வாடகை பாக்கி வைத்திருந்தால் காலி செய்துகொள்ளவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒருவருட காலத்திற்கு பிறகு தாவா சொத்தை காலி செய்து 1ம் பிரதிவாதியிடம் ஒப்படைத்துவிடவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் ஞாபகம் இல்லை. ஒப்பந்தத்தில் உள்ள நிபந்தனைகளை நான் மீறும்பட்சத்தில் என்மீது எடுக்கும் சட்டப்படியான நடவடிக்கைகளுக்கு நான் கட்டுப்படுவேன் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அசல் வாடகை ஒப்பந்தத்தை என் வசமும் நகலை 1ம் பிரதிவாதி வசமும் ஒப்படைத்துள்ளதாக ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2 அசல் ஒப்பந்தங்கள் தயார் செய்யப்பட்டது. அதில் எனக்கு கொடுக்கப்பட்ட அசலின் நகல் 1ம் பிரதிவாதியிடமும், 1ம் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்ட அசலின் நகல் என்னிடமும் கொடுக்கப்பட்டது. அவ்வாறு 2 அசல் ஒப்பந்த பத்திரங்கள் தயார் செய்யப்பட்டது என்ற விபரத்தை எனது பிராதிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் ஞாபகம் இல்லை.

மாத வாடகையாக ரூ.4700/- என்றும் ரூ.30,000/- வட்டி இல்லாத அட்வான்ஸ் தொகையாக 1ம் பிரதிவாதி என்னிடம் பெற்றுக்கொண்டதாக ஒப்பந்தத்தில் உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி அசல் ஒப்பந்த பத்திரம் என்னிடம் இருந்ததால் 2வது பக்கத்தை மாற்றம் செய்து மாத வாடகை ரூ.3,000/- என்றும் அசல் ரூ.4,00,000/- என்றும் குறிப்பிட்டு 1ம் பிரதிவாதியின் கையெழுத்தை மோசடியாக ஏற்படுத்தி அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வாடகை ஒப்பந்ததில் உள்ள 2 வது பக்கத்தில் கண்ட கையெழுத்து 1ம் பிரதிவாதியின் கையெழுத்து இல்லை என்பதை நிரூபணம் செய்வதற்காக 1ம் பிரதிவாதி தரப்பில் மேற்படி ஆவணத்தை கையெழுத்து நிபுணருக்கு அனுப்பி ஆய்வு செய்து அறிக்கை பெறுவதற்கு மனு தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி வா.சா.1 குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)